முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 635**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

25.06.2021, வெள்ளிக்கிழமை

1. பிரணவ சூட்சுமமே அரங்கா வாழ்க
பிரளயம் காக்க வந்த தேசிகா வாழ்க
தரணியோர் நலங்கருதி தர்மபலத்தை
தவசக்திகொண்டு உலகில் இயக்கும் தேசிகனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரை ஆசி
தாழ்விலா அரங்கன் திருவடி
தரிசித்து ஞான தீட்சை பெற்றவர்கள்
3. பெற்றவர்கள் ஈரேழே பெரும்பேற்றை
பிசகின்றி அரங்கன் வழி அடைந்து உயர்வர்
உற்றதொரு அரங்கன் தர்மத்தை
உண்மைநெறியாக ஏற்று செய்யும் மக்கள்
4. மக்களெல்லாம் மரணம் வெல்வர்
மக்களெல்லாம் மறுமையையும் போக்குவர்
ஆக்கமுடன் அரங்கன் வழிகாட்டுகின்ற
அற்புதமான சன்மார்க்க நெறி பிசகாத வண்ணம்
5. வண்ணமுடன் உலகோர் பின்பற்றி வர
வணங்கிவணங்கி என் வழிபாட்டோடு இணங்கி
தர்மஞான வழி இடைவிடா
தொடர்ந்து வரும் மக்களெல்லாம்
6. மக்களெல்லாம் அரங்கனால் உயர்த்தப்படுவர்
மாதவசிக்குள் யானிருந்து அற்புதம் நிகழ்த்த
தேக்கமின்றி வருபவரும் ஏற்பவரும்
தேசிகாய நமஹ எனும் ஜெபதபத்தில் மூழ்கி இருப்பவரும்
7. இருக்கின்ற அனைத்து மக்களுக்கும்
இலகுவாய் அரங்கன் வழி ஆறுமுகன் என் ஆசி
கருத்தாக வந்து பிறவி இடர்போக்கும்
கலியுகத்தை வெல்லும் மகா சக்தியும் அருளும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–